SET-4

Series #CDBA/S

Q.P. Code **10/S**

Roll No. | | | | | | | | |

Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- இந்த வினாத்தாளில் **14** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- **எழுதத் தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு **15** நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

- Please check that this question paper contains **15** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : **3** மணி* | *மோ. மதிப்பெண்கள் : **80***

*Time allowed : **3** hours* | *Maximum Marks : **80***

***General Instructions :***

**பொதுவான வழிமுறைகள் :**

1. *The question paper contains **five** sections.*
   இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டுள்ளது.
2. ***Section A** – Contains **2** questions.*
   பகுதி அ - **2** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. ***Section B** – Contains **4** questions.*
   பகுதி ஆ - **4** வினாக்களைக் கொண்டுள்ளது.
4. ***Section C** – Contains **4** questions.*
   பகுதி இ - **4** வினாக்களைக் கொண்டுள்ளது.
5. ***Section D** – Contains **1** question.*
   பகுதி ஈ - **1** வினாவைக் கொண்டுள்ளது.
6. ***Section E** – Contains **3** questions.*
   பகுதி உ - **3** வினாக்களைக் கொண்டுள்ளது.
7. *Attempt as per specific instructions for each question.*
   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**பகுதி – அ (படித்தல் திறன் – 10 மதிப்பெண்கள்)**
**SECTION – A (Unseen Passage – 10 marks)**

**1.** பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

நாடுகளிடையே நட்புறவு, நல்லெண்ணம், வினையாட்டார்வம் முதலியவற்றை வளர்க்கவும் விளையாட்டு, உடற்பயிற்சி, ஊக்கம், உழைப்பு, உயர்வு ஆசியவற்றை உலக அளவிலும் ஆசிய அளவிலும் வளர்க்கவும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நான்கு

ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைமுறைப் படுத்தி வருகிறது ஆசிய விளையாட்டுப் போட்டிக்கழகம்.

1945-ஆம் ஆண்டு டில்லியில் நடந்த ஆசிய நாடுகள் மாநாட்டில் இந்திய ஒலிம்பிக் சங்கச் செயலாளர் பாட்டியாலா இளவரசர் சோந்தி ஆசிய விளையாட்டுப் போட்டி நடத்துவதற்குரிய கருத்தை வெளியிட்டார். மறைந்த இந்திய பிரதமர் நேரு அவர்கள் அதற்கு ஊக்கமளித்து 1951-ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியை டெல்லியில் தொடங்கினார். அதில் 11 ஆசிய நாடுகள் பங்கேற்றன. 489 விளையாட்டு வீர்ர்கள் கலந்து கொண்டனர். ஆறுவகை விளையாட்டுகள் நிகழ்வுற்றன.

ஆசிய விளையாட்டு விழா ஆசிய நாடுகள் அனைத்தும் ஆசிய அளவில் விளையாட்டுத் திறம் பெற்ற பின் உலக அளவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளிலும் வெற்றியடையப் பயிற்சி அளிக்கிறது. விளையாட்டுப் போட்டிகளைக் காணும் இலட்சக்கணக்கானோர் விளையாட்டுகளில் ஆர்வமும் மகிழ்ச்சியும் பெற்று வாழ்வில் வளம் பல எய்துகிறார்கள்.

**வினாக்கள்** :

(i) ஆசிய விளையாட்டுப் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது ?

(A) நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை

(B) எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை

(C) இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை

(D) ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை

(ii) டெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்ட நாடுகள் எத்தனை ?

(A) 21

(B) 11

(C) 111

(D) 489

(iii) உலகளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியின் பெயரென்ன ?

(A) ஐக்கிய நாடுகளின் விளையாட்டு

(B) ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் விளையாட்டு

(C) ஆசிய விளையாட்டு

(D) ஒலிம்பிக் விளையாட்டு

(iv) எவ்வாண்டு ஆசிய விளையாட்டுப் போட்டி டெல்லியில் நடைபெற்றது ?

(A) 1951 ஆம் ஆண்டு

(B) 1955 ஆம் ஆண்டு

(C) 1965 ஆம் ஆண்டு

(D) 1935 ஆம் ஆண்டு

(v) டெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு ஊக்கமளித்தவர் யார் ?

(A) பிரதம மந்திரி நேரு

(B) பிரதம மந்திரி இந்திரா காந்தி

(C) பிரதம மந்திரி இராஜீவ் காந்தி

(D) பிரதம மந்திரி வாஜ்பாய்

**2.** பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்கலுக்கேற்ற விடை எழுதுக : *5×1=5*

மக்களின் நல் வாழ்வில் சித்தர்களுக்கிருந்த அக்கறை அதிகம். நாம் ஈடேறுவதற்கான வழிமுறைகளை அவர்கள் சொல்லிச் சென்றார்கள். எத்தனை பெரிய பொக்கிஷம் நம்மிடம் இருந்திருக்கிறது. தங்கள் வரைக்கும் தவப்பலனைப் பெற்றால் போதும் என்று முனிவர்களைப் போல் அவர்கள் இருந்து விடவில்லை. எல்லோரையும் கைதூக்கி விட வேண்டும் என்னும் உயரிய குறிக்கோளுடன் அவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அநேக வைத்திய முறைகளையும் யோக நெறிகளையும், நடைமுறை வாழ்விற்கான தத்துவங்களையும் நமக்காக வழங்கிச் சென்றிருக்கிறார்கள். ஆன்மீகத்தில் அவர்களுடைய பங்களிப்பைச் சிகரம் என்றே சொல்ல வேண்டும். புதிய சிந்தனைகளும் புரட்சிக் கருத்துகளும் சிந்தர்களிடமிருந்தே தொடங்கிற்று. சித்தர்களின் வாழ்க்கை முறையே தனி. நினைத்தபோது உண்பார்கள். கிடைத்ததை உண்ணாமலும் கூட இருப்பார்கள். அவர்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை. மனித குல மேம்பாடுதான் அவர்கள் சிந்தை முழுவதும் நிரம்பியிருந்த்து. அதனால் தங்களைத் தேடி மக்கள் வர வேண்டுமென்று எண்ணாமல், காத்திராமல் மக்களைத் தேடி சித்தர்களே செல்வர்.

**வினாக்கள்** :

(i) சித்தர்கள் நமக்காக வழங்கிச் சென்றவைகள் எவை ?

(ii) சித்தர்களின் சிந்தை முழுவதும் நிரம்பியிருந்தவை எவை ?

(iii) மக்களின் நல் வாழ்வில் அதிகம் அக்கறை கொண்டவர் யாவர் ?

(iv) சித்தர்கள் யாரைக் கைதூக்கி விட வேண்டுமென்ற குறிக்கோள் உடையவர்கள் ?

(v) ஆன்மீகத்தில் சித்தர்களின் பங்களிப்பு எவ்வகையில் இருந்தது ?

## பகுதி – ஆ (இலக்கணப் பகுதி – 12 மதிப்பெண்கள்)
## SECTION – B (Grammar – 12 marks)

**3.** சான்று தருக : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) *3×1=3*

(i) சொல்லிசை அளபெடை

(A) கெடுப்பதூஉம் (B) அடிதழீஇ

(C) ஓஒதல் (D) அரங்ங்கம்

(ii) உவமைத்தொகை

(A) கார்குழல்

(B) சாரைப்பாம்பு

(C) வீசுதென்றல்

(D) செந்தாமரை

(iii) பெயரெச்சத் தொடர்

(A) வந்து நின்றான்

(B) பறந்தவிமானம்

(C) பறந்து வந்தான்

(D) வந்தான் பறந்து

(iv) முன்னிலை வினைகள்

(A) நடந்தான் (B) நடந்தாய்

(C) வந்தான் (D) வந்தோம்

(v) உற்றது உரைத்தல் விடை

(A) விளையாட வருகிறாயா ? என்ற வினாவிற்கு கால் வலிக்கும் என உரைப்பது.

(B) விளையாட வருகிறாயா ? என்ற வினாவிற்கு கால் நொந்தது என உரைப்பது.

(C) ஆடலாமா ? என்ற வினாவிற்கு உடம்பு வலிக்கும் என உரைப்பது.

(D) பாடலாமா ? என்ற வினாவிற்கு தொண்டை வலிக்கும் என உரைப்பது.

**4.** கோடிட்ட இடங்களை நிரப்புக :
(எவையேனும் மூன்று மட்டும்) *3×1=3*

(i) மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் __________ திணைக்குரிய பறைகளாம்.

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) மருதம் (D) நெய்தல்

(ii) சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று சேர்த்துப் பொருள் கொள்வது __________ .

(A) ஆற்றுநீர் பொருள்கோள்

(B) கொண்கூட்டுப் பொருள் கோள்

(C) நிரல் நிறைப் பொருள்கோள்

(D) எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்

(iii) அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது __________ .

(A) பெண்பால் (B) பலர்பால்

(C) ஒன்றன்பால் (D) பலவின்பால்

(iv) இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது __________ தொடர் ஆகும்.

(A) வேற்றுமைத்தொடர்

(B) விளித்தொடர்

(C) பெயரெச்சத்தொடர்

(D) இடைச்சொல் தொடர்

(v) சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது __________ .

(A) தொடர் (B) மொழி

(C) கிளவி (D) பதம்

**5.** இலக்கணக்குறிப்பு எழுதுக : *3×1=3*

(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)

(i) இரவு பகல்

(A) உம்மைத்தொகை

(B) அன்மொழித்தொகை

(C) எண்ணும்மை

(D) உவமைத்தொகை

(ii) வினவியவன்

(A) பெயர்ச்சொல்

(B) வினைச்சொல்

(C) பெயரெச்சம்

(D) வினையாலணையும்பெயர்

(iii) வருபுனல்

(A) வேற்றுமைத்தொடர்
(B) வினைமுற்றுத்தொடர்
(C) உவமைத்தொகை
(D) வினைத்தொகை

(iv) பரூஉக்

(A) செய்யுளிசை அளபெடை
(B) இன்னிசை யளபெடை
(C) சொல்லிசை அளபெடை
(D) ஒற்றளபெடை

(v) வாழ்த்துவோம்

(A) தன்மை ஒருமை வினைமுற்று
(B) தன்மை பன்மை வினைமுற்று
(C) முன்னிலை ஒருமை வினைமுற்று
(D) முன்னிலை பன்மை வினைமுற்று

**6.** கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) *3×1=3*

(i) கொல் (தொழிற்பெயர் விகுதி சேர்த்து எழுதுக)

(A) கொல்லுகின்ற (B) கொன்ற
(C) கொலை (D) கொல்லும்

(ii) பள்ளிப் படிப்பு – எவ்வகை தொகை நிலைத்தொடர் எனக் கூறுக.

(A) வெற்றுமைத்தொகை
(B) பண்புத்தொகை
(C) வினைத்தொகை
(D) உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

(iii) பறவைகள் பறந்தது (வழுவை நீக்கி எழுதுக)

(A) பறவை பறந்தன

(B) பறவைகள் பறந்தன

(C) பறந்தன பறவை

(D) பறவைகள் பறக்கின்றது

(iv) ‘வாராயே’ ‘ஒரு பதில் கூறாயே’ – அடிக்கோடிட்ட சொற்கள் எவ்வகை வினா எனக்கூறுக.

(A) ஏவல் வினா

(B) ஐயவினா

(C) கொளல் வினா

(D) கொடைவினா

(v) குறிஞ்சித்திணை - (பெரும்பொழுதைக் கூறு)

(A) கார்காலம்

(B) இளவேனிற்காலம்

(C) முதுவேனிற்காலம்

(D) குளிர்காலம்

**பகுதி – இ (இலக்கியம் – 31 மதிப்பெண்கள்)**
**SECTION – C (Main Course Book – 31 marks)**

**7.** பின்வரும் கோடிட்ட இடங்களைத திருக்குறள் சீர்களால் நிரப்புக. *2×1=2*

(i) _____ பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

(A) பகைகொளலின்

(B) பெரியாரைப்

(C) உடைத்தென்

(D) பண் என்னாம்

(ii) இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
_____________ உவப்ப துடைத்து.

(A) எள்ளுள்

(B) உள்ளுள்

(C) ஊர்

(D) மகிழ்ந்து

**8.** பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

'தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்

போ தவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்க டோறும்

மாதவி வேலிப் பூக வனம்தொறும் வயல்க டோறும்

ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே'

**வினாக்கள்** :

(i) கம்பர் இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி எப்பெயரினை சூட்டினார் ?

(A) இராமாவதாரம்

(B) கம்ப அவதாரம்

(C) மச்ச அவதாரம்

(D) கூர்ம அவதாரம்

(ii) கம்பராமாயணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது ?

(A) இரண்டு

(B) ஆறு

(C) மூன்று

(D) எட்டு

(iii) கம்பரை ஆதரித்த வள்ளல் யார் ?

(A) சடையப்ப வள்ளல்

(B) பாரி

(C) குமணன்

(D) முத்துராமலிங்கர்

(iv) பாடல்வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(A) கம்பராமாயணம்

(B) பாரதிதாசன் கவிதைகள்

(C) பாரதியார் கவிதைகள்

(D) வாணிதாசன் கவிதைகல்

(v) கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் ________ பாடும்.

(A) வீரம் (B) புகழ்

(C) கவி (D) பாட்டு

**9.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. *3×3=9*

(i) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?

(ii) முல்லைப் பாட்டு கார்காலக் காட்சியை விளக்குக.

(iii) ஆற்றுப்படுத்துதல் என்பது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(iv) செய்குதம்பிப் பாவலர் – குறிப்பு வரைக.

(v) இராமனின் திருமேனி அழகைக் கம்பர் எவ்வாறு விளக்குகிறார் ?

**10.** பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி. *3×5=15*

(i) பொய்க்கால் குதிரையாட்டம் – விளக்குக.

(ii) தாவரங்களின் இலை, கொழுந்து வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

(iii) அறவுணர்வும் தமிழர் மரபும் குறித்து எழுதுக.

(iv) மொழிபெயர்ப்பு சிறப்புப் பெற்று வளரச் செய்ய வேண்டியவை யாவை ?

(v) செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகளை விவரித்து எழுதுக.

## பகுதி – ஈ (துணைப்பாடம் – 10 மதிப்பெண்கள்)
## SECTION – D (Non-detail – 10 marks)

**11.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. *1×10=10*

(i) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை.

(ii) உரைநடையின் அணிநலன்கள்.

(iii) புயலிலே ஒரு தோணி.

## பகுதி – உ (படைப்பாற்றல் – 17 மதிப்பெண்கள்)

**SECTION – E (Creative Writing – 17 marks)**

**12.** (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. *1×3=3*



**For Visually Impaired Candidates**

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவர்கள் மட்டும்.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக. *3*

(i) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

(ii) நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்.

**13.** பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக. *1×8=8*

(i) உனது பாட்டியின் உடல்நலம் குறித்தும் நீ விரைவில் அவர்களை சந்திக்க இருப்பதாகவும் கடிதம் ஒன்று வரைக.

(ii) பழுதுபட்ட மின்கம்பிகளைச் சரிசெய்தும் மின்னழுத்த ஏற்ற இறக்கத்தை சரி செய்ய வேண்டியும் மின்வாரிய அலுவலகத்திற்கு கடிதம் ஒன்று வரைக.

(இரண்டு கடிதங்களிலும் உம் முகவரி க. கண்மணி, லட்சுமி நகர், சென்னை-30 எனக் கொள்க)

**14.** ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று வரைக. *1×6=6*

(i) முன்னுரை – பிரபல பத்திரிக்கைகள் – தலைப்புச் செய்திகள் – நாட்டின வளர்ச்சி – பத்திரிக்கையின் பயன்பாடு – பத்திரிக்கையின் கடமை – முடிவுரை.

(ii) முன்னுரை – நதிநீர் இணைப்பு – முறையான ஒப்பந்தம் – நீர்தேவையை சமாளித்தல் – குறைபாடுகள் – திட்டம் – நன்மைகள் – முடிவுரை.

(iii) முன்னுரை – விமான அனுபவம் – விமான நிலையத்தில் நான் – பயணச் சீட்டு சரிபார்த்தல் – விமானத்தினுள் நான் – முடிவுரை.